

சமணர் குகை (அழகர் மலை) Jain Caves (Alazhahar Malai)

## அழகர்மலை சமணர்குகைத்தளம்

அழகர்மலையிருந்து மேலூர் செல்லும் சாலையில் கிடாரிபட்டி, சுந்தரராஜன்பட்டி என்ற ஊர்கள் உள்ளன. இவ்வூர்களுக்கு அருகிலுள்ள அழகர்மலைத் தொடரில் தெற்கு நோக்கிய நிலையில் சற்று உயரமான இடத்தில் இயற்கையான மிகப்பெரிய குகைத்தளம் ஒன்று உள்ளது இதனை மக்கள் பஞ்சபாண்டவர் குகை என்று அழைக்கின்றனர். இங்கு கற்படுக்கைகள் உள்ளதால் மக்கள் பஞ்சபாண்டவர்கள் வனவாசத்தின்போது வந்து தங்கிய இடமென நம்புகின்றனர். ஆனால் இக்குகைத்தளம் கி.மு.மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்பாகத் தொல்குடிமக்கள் வாழ்ந்த இடமாகவும் அதன்பிறகு சமணமுனிவர்கள் தங்கிய இடமாக விளங்கியிருக்கிறது என்பதை இங்குள்ள பழங்காலப் பாறையோவியங்களும் தமிழ்பிராமி கல்வெட்டுகளும் சமணத்தீர்த்தங்கரர் உருவமும் எடுத்துக் காட்டுகின்றன.

இக்குகைத்தளத்தில் எப்போதும் நீர் நிறைந்திருக்கும் இயற்கையான சுனை ஒன்று இருக்கிறது. குகைத்தளத்தின் விதானத்தில் இரண்டாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட பாறைவோவியங்கள் காணப்படுகின்றன. செங்காவி வண்ணம் கொண்டு தீட்டப்பட்ட இவ்வோவியங்கள் காலத்தைக் கடந்து இன்னும் காண்பவர் உள்ளத்தை ஈர்க்கும் வண்ணம் உள்ளன. இவ்வோவியத்தில் பறவைமுக மனிதர்களின் உருவங்களும் துடிப்பாக நிற்கும் மான் போன்ற விலங்குகளின் உருங்களும் மற்றும் மனிதர் பயன்படுத்தும் ஏணியின் உருவமும் காணப்படுகின்றன.

இக்குகைத்தளம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.பத்தாம் நூற்றாண்டுவரை சமணமுனிவர்களின் உறைவிடமாகவும் வழிபாட்டுத் தலமாகவும் இருந்திருக்கிறது. இங்குள்ள கி.மு.இரண்டு மற்றும் முதலாம் நூற்றாண்டைச் சார்ந்த பன்னிரண்டு தமிழ்பிராமி கல்வெட்டுகள் இக்குகைத் தளத்தை உருவாக்கியவர் பெயர்களையும் சில முனிவர்களின் பெயர்களையும் குறிப்பிடுகின்றன. இக்குகைத்தளத்தின் தரைப்பகுதி நன்கு வளவளப்பகத் தேய்த்து சில கற்படுக்கைகளுடன் காட்சியளிக்கிறது. குகைத் தளத்தின் முகப்பில் முகப்பிலிருந்து மழைநீர் உள்ளே வராத வண்மை நீண்ட காடி (புருவம்) வெட்டப்பட்டுள்ளது.

சங்ககாலத்தினைச் சார்ந்த இங்குள்ள தமிழ்பிராமி கல்வெட்டுகளில் மதுரையின் பழம்பெயர் ‘மதிரை’ என்று குறிப்பிடப்படுகிறது. மதிரையைச் சேர்ந்த பொன்கொல்லன் ஆதன்ஆதன், உப்புவணிகன் வியக்கன் கணதிகன், பாணித வணிகன் நெடுமலன், கொழுவணிகள் சந்தன் ஆகியோரின் பெயர்கள் இக்குகைத்தளத்தை உருவாக்கியவர் பெயர் வரிசையில் இடம்பெற்றுள்ளன. பாணிதவவாரிகன் சர்க்கரை அல்லது பச்சைக் கற்பூர வணிகனாக இருக்க வேண்டும். கொழுவணிகன் இரும்புக்கலப்பை வணிகனாக இருக்கலாம். மதிரை வணிகர்கள் சமணத்திற்கு ஆதரவளித்தை இங்குள்ள கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. வெண்பள்ளி என்ற ஊரைச் சார்ந்த அறுவை வணிகன் எள அட்டன் (ஆடைவணிகன்) பெயரும் இங்குள்ள கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. வெண்பள்ளி என்ற ஊரைச் சார்ந்த அறுவை வணிகன் என அட்டன் (ஆடைவணிகன்) பெயரும் இங்குள்ள கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. இவை தவிர அனாகன்.., கனக ஆதன் மகன் ஆதன்ஆதன், சபமிதா ஆனபமித்தி, “ஞ்சி கழுமாறன், நாதன், தன்மன் காயபன், தியன்சந்தன், ஆகியோர் பெயர்கள் குகையின் விதானத்து முகப்பிலுள்ள கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றன. குகைத்தளத்துக் கற்படுக்கையில் அதனை உருவாக்கிய கணிநாகன், கணிநாதன் என்ற இருவர்களது பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. சில தமிழ்பிராமி கல்வெட்டுகளின் இறுதியில் பலவகை குறியீடுகள் பொறிக்கப்பட்டுள்ளன.

குகைத்தளத்தின் கீழ்கோடியில் அர்த்தபரியங்காசனத்தில் முக்குடையின் கீழே அமர்ந்த தீர்த்தங்கரரின் பத்தாம் நூற்றாண்டு புடைப்புச் சிற்பம் உயரமான இடத்தில் உள்ளது. இதனை உருவாக்கிய அச்சணந்தியின் பெயர் வட்டெழுத்தில் இச்சிற்பத்திற்கு அடியில் பொறிக்கப்பட்டுள்ளது.